# வாழ்க்கைப் படிப்பினைகள் கற்றுத்தரும் உன்னதத் தாதியர் பணி

மோனலிசா

கணப்பொழுதில் மாறக்கூடிய நிச்சயமற்றது இந்த வாழ்க்கை என்ற புரிதலையும் மிகுந்த மனநிறைவையும் தருகிறது இந்த வேலை என்று கூறினார் தாதியாகப் பணிபுரியும் திரு பிரசாந்த் பிரான்சிஸ், 29. டான் டோக் செங் மருத்துவமனையில் கடந்த நான்கு ஆண்டுகளாக பணியாற்றிவரும் இவர், தற்போது மூத்த தாதியாக உள்ளார்.

தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த இவர், சுகாதாரத் துறையில் பணியாற்றிய தம் அம்மாவிடம், பலர் உள்ளார்ந்த அன்புடன் நன்றி கூறுவதைக் கண்டு ஊக்கம் பெற்றார்.

அந்த இளம்வயதிலிருந்தே மனித வாழ்வின் அடிப்படைக் கூறான உடல்நலத்தை, பேணும் பணியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று உறுதிகொண்டார்.

மிகுந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தாதிமைப் பட்டப்படிப்பை முடித்த இவருக்கு, ஒரு மூத்த சகோதரரும் ஓர் இளைய சகோதரரும் உள்ளனர். குடும்பத்தின் வறுமைச் சூழலின் காரணமாக 2019ல் சிங்கப்பூர் வந்த இவர், அதற்கு முன்னதாக நான்காண்டுகள் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தாதியாக பணியாற்றியுள்ளார்.

சிங்கப்பூர் வந்தபோது ஆரம்ப காலத்தில் இவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் தாதியாக பணியாற்றினார். இப்பிரிவில் அன்றாடம் தீவிரமான நிலையில் உள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பது மிகுந்த சவாலாக இருந்ததாகவும் ஒவ்வொரு நாளும் பல நெருக்கடியான சூழ்நிலைகளைச் சந்தித்துள்ளதாகவும் திரு பிரசாந்த் கூறினார்.



தாதியாகப் பணியாற்றும் திரு பிரசாந்த் பிரான்சிஸ், 29. **படம்: டான் டோக் செங் மருத்துவமனை**

குறிப்பாக, கொவிட்–19 நோய்த்தொற்று சூழலில் நோயின் வீரியமும் தாக்கமும் சரிவர புரியாத சூழலில் அவ்வப்போது மாறும் சிகிச்சைமுறைகளை நினைவில் வைத்து நோயாளிகளைப் பராமரிப்பது மிகுந்த சவாலாக இருந்ததாக பகிர்ந்தார் திரு பிரசாந்த்.

ஒவ்வொரு நாளும் பாதுகாப்பு உடையுடன் நோயாளிகளுக்கு உதவினாலும் பொதுமக்கள் எங்களை அணுகத் தயக்கம் காட்டி ஒதுக்கும் சூழல்கள் மனவருத்தத்தை அளித்தபோதும் தொடர்ந்து இன்முகத்துடன் பராமரித்தது எங்களுக்குள் இருந்த மனித மாண்பை உணரும் தருணங்களாக அமைந்தன என்றும் கூறினார் பிரசாந்த்.

ஒரு தாதியாக எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பணிபுரியும் இவர், "ஒருமுறை இரவுநேரத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான 40 வயது பெண்மணி ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டுவரப்பட்டார். பரிசோதித்துக்கொண்டிருக்கும்போதே சுயநினைவை இழந்து பேச்சுமூச்சின்றி சரிந்து விழுந்தார்.

"நெருக்கடி நிலையில் இருந்த அவருக்குத் தொடர்ந்து சிபிஆர் சிகிச்சைமுறை அளித்தேன். சற்றே தெளிந்து நிதானத்திற்கு வந்த அவர், 15 நிமிடங்களுக்குள் மீண்டும் மயங்கி விழுந்தார். இதேபோல் அன்றிரவு ஏறத்தாழ நான்கு மணி நேரம் போராடியும் சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார்," என்று நினைவுகூர்ந்தார் பிரசாந்த்.

அன்று மருத்துவர்களால் அவரது மரணம் உறுதிசெய்யப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டு அவருடைய உடலைக் குடும்பத்தார் எடுத்துச் செல்லும்வரை குழந்தைகளுக்காகவாவது அவர் மீண்டு வந்திருக்கலாம் எனத் தாம் ஏங்கியதை மறக்க முடியாத அனுபவமாகக் குறிப்பிட்டார்.

வேலையில் திருப்தி காண்பது வழக்கம் என்றாலும் இப்பணியில் கடின உழைப்புடனும்கூட, இது போன்ற சம்பவங்கள் வருத்தம் அளிக்கலாம் என்று குறிப்பிட்ட திரு பிரசாந்த், ஒவ்வொரு நாளும் பல வாழ்க்கைப் படிப்பினைகளைக் கற்றுத்தரும் பணியாகவும் இது உள்ளது என்றார்.

அதிகளவில் பெண்கள் உள்ள துறையாக இருந்தாலும் பணிக்கும் பாலினத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் தம்மைப் பொறுத்தவரை அனைத்துத் துறைகளிலும் அனைத்து பாலினத்தாரும் பணிபுரிவது பரந்துபட்ட பார்வையை அளித்து அத்துறையின் வளர்ச்சிக்கு உதவும் என்றும் கூறினார்.

monolisa@sph.com.sg

மக்கள்தொகை விவகாரங்கள் தொடர்பிலான மாநாட்டில் அறைகூவல்

# சவால்களை எதிர்கொள்ள கூடுதல் துணிவு தேவை

அனைத்துலக அளவில் சவால் விடுக்கும் பருவநிலை மாற்றம் விவகாரம் போலவே மக்கள்தொகையில் ஏற்படும் மாற்றமும் முக்கியமாகக் கருதப்படவேண்டும். அத்துடன் தொடர்புகளைக் கண்டறிவதிலும் தீர்வுகளை முன்வைப்பதிலும் கூடுதல் துணிவுடன் கல்வியாளர்கள் செயல்பட வேண்டும் என்றார் வர்த்தகர் ஹோ குவோன் பிங்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் மக்கள்தொகை விவகாரங்கள் தொடர்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் அவர் பேசியிருந்தார்.

"மனித இனம் நீடிப்பதற்குக் கட்டாயமாக நமது மொத்த பிறப்பு விகிதம் (டிஎஃப்ஆர்) அதிகரித்து தேசிய தற்காப்புக்கு ஈடாக உத்திபூர்வ முக்கியத்துவம் பெற்றதாக அது கருதப்பட்டாலும் எண்ணங்களில் அடிப்படை மாற்றம் தேவைப்படுகிறது. அரசாங்கத்தால் மட்டுமல்லாமல் தொழில் துறை, வீடுகள் போன்றவையும் இந்த மாற்றத்தில் தீவிரம் காட்ட வேண்டும்," என்றார் அவர்.

குழந்தைப் பிறப்பு தொடர்பில் தந்தையர் விடுப்பு அண்மையில் நான்கு வாரங்களாக இரட்டிக்கப்பட்டது. இருப்பினும் குழந்தை பெற்றுக்கொள்ள முடிவெடுக்கும் ஒரு தம்பதிக்கு இந்த மாற்றம் கணிசமாக இல்லாமல் போகலாம் என்றார் திரு ஹோ.

மாநாட்டின் தொடக்க உரை நிகழ்த்திய பிரதமர் அலுவலக அமைச்சர் இந்திராணி ராஜா, சிங்கப்பூரின் 'டிஎஃப்ஆர்' வரலாறு காணாத அளவுக்கு 2022ல் 1.04க்குச் சரிந்ததாகவும் முன்னுரைப்பான 1.05ஐக் காட்டிலும் இது குறைவு என்றும் குறிப்பிட்டார்.

குடியிருப்பாளர் ஊழியர் அணியின் வளர்ச்சியும் மெதுவடைந்துவருகிறது. 65 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடைய சிங்கப்பூரர்கள் 18 விழுக்காட்டினர். நிரந்தரவாசிகளையும் வெளிநாட்டவரையும் உள்ளடக்கிய சிங்கப்பூரின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் இதே வயதுடையோர் 13 விழுக்காட்டினர்.

இந்நிலையில் சிங்கப்பூரில் நிலையற்றதாக இருந்துவரும் மிகப் பெரிய வெளிநாட்டு ஊழியர் சமூகத்திலிருந்து எதிர்கால நிரந்தரவாசிகளையும் குடிமக்களையும் தேர்ந்தெடுக்கலாம்.

குறிப்பிட்ட தயார்படுத்தும் ஒரு திட்டத்தின் மூலம் சிங்கப்பூரில் பல ஆண்டுகளாக அதிகச் செயல்திறத்துடன் விளங்கிவருவோரை இவ்வாறு தேர்ந்தெடுக்கலாம் என்று திரு ஹோ ஆலோசனை கூறினார்.

பிரதமர் அலுவலகத்தில் உத்திபூர்வக் குழுமத்தின் தேசிய மக்கள்தொகை, திறனாளர் பிரிவை மேற்பார்வையிடும் திருவாட்டி இந்திராணி, நாட்டின் முதுமையடையும் சமூகத்தையும் குறைவான பிறப்பு விகிதத்தையும் சமாளிக்க அரசாங்கம் குறிப்பாக இரு உத்திகளைக் கையாள்கிறது என்றார்.

குழந்தைப் பராமரிப்பு தொடர்பில் கூடுதல் உதவி வழங்கும் வழிகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதுடன் மேலும் அதிகமான பாலர் பள்ளி இடங்களையும் தொடர்ந்து உருவாக்கித் தரும் என்றார் அவர்.

இதற்காக நிறுவனங்கள் வேலை உருமாற்றம் தொடர்பில் தத்தம் நேரத்தையும் முயற்சியையும் முதலீடு செய்ய வேண்டும். வேலையில் செலவிடும் நேரத்துக்குப் பதிலாக விளைவுகளில் முதலாளிகள் கவனம் செலுத்தவேண்டும்.

முதுமை என்பது நீண்ட ஆயுளுடன் தொடர்புபடுத்தப்படவேண்டும். சுகாதாரப் பராமரிப்பு, பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றைக் காட்டிலும் முதுமையால் விளையும் பலன்களை எண்ணிப் பார்க்க வேண்டும் என்றார் அமைச்சர் இந்திராணி.

## செய்திக்கொத்து

### வாழ்நாள் காப்புறுதித் திட்டத்தை வாங்கியவர் எண்ணிக்கை குறைவு

பொருளியல் வளர்ச்சி மெதுவடைந்துள்ள நிலையில் 2023ன் முதல் காலாண்டில் வாழ்நாள் காப்புறுதித் திட்டங்களுக்கான விற்பனை குறைந்திருந்தது. இதன்படி புதிதாகப் பதிவான வர்த்தகச் சந்தாக்களின் மதிப்பு $1.05 பில்லியனாக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 13.6% குறைவு. இத்தகவலை சிங்கப்பூர் வாழ்நாள் காப்புறுதிச் சங்கம் நேற்று வெளியிட்டது.

அதிகரித்துவரும் வட்டி விகிதங்களும் இச்சரிவுக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதற்கிடையே, கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு மேலும் 40,000 சிங்கப்பூரர்கள் மற்றும் நிரந்தரவாசிகள் ஒருங்கிணைந்த காப்புறுதித் திட்டங்களின் மூலம் பலனடைந்துள்ளதாக சங்கத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

### அதிபர் தேர்தல்: 50 பொதுச் சேவைத் துறை பணிகளில் உள்ளோர் நிற்கலாம்

சிங்கப்பூரின் அடுத்த அதிபர் தேர்தலில் நிற்பதற்கான தகுதியைப் பொதுச் சேவைத் துறையின் கிட்டத்தட்ட 50 வேலைகளில் உள்ளோர் பெற்றிருப்பதாக கல்வி அமைச்சர் சான் சுன் சிங் தெரிவித்துள்ளார்.

அதிபர் தேர்தலில் வேட்பாளராக நிற்கத் தகுதியுடைய தனியார்த் துறையினரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. 1,200க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்குச் சராசரி நிகர மதிப்பு $500 மி. அல்லது அதற்கும் அதிகமாக இருந்ததாக தொகுதியில்லா எம்பி லியோங் மன் வாய் எழுப்பிய நாடாளுமன்றக் கேள்விக்கு திரு சான் பதிலளித்தார்.

## சாய்ந்த தொங்குமேடையிலிருந்து ஊழியர்கள் மீட்கப்பட்டனர்



பக்கவாட்டாகச் சாய்ந்த தொங்குமேடையிலிருந்து இரண்டு ஊழியர்கள் மீட்கப்பட்டனர். **படங்கள்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் வாசகர்**

பழுதுபார்ப்புப் பணிக்காக தொங்குமேடையில் கால்வைத்த இரு ஊழியர்கள், உயரத்திலிருந்து விழாமல் உயிர்தப்பினர். பூன் லே டிரைவ் புளோக் 199ல் நேற்று நடந்த இச்சம்பவம் குறித்து சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையினருக்குக் காலை 8.10 மணிக்குத் தகவல் கிடைத்தது.

அதிகாரிகள் சம்பவ இடத்தை அடைவதற்குள் 14வது மாடியில் இருந்த சன்னல் வழியாக ஒருவர் பாதுகாப்பாக வீட்டினுள் சென்றுவிட்டார். அதிகாரிகளின் துணையோடு 15வது மாடியில் அமைந்திருந்த சன்னல் தலத்திலிருந்து மற்றோர் ஊழியர் மீட்கப்பட்டார்.

இரு ஊழியர்களும் பின்னர் இங் டெங் ஃபோங் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மருத்துவ விடுப்புடன் அனுப்பப்பட்டனர்.

கட்டடத்தின் கூரைப் பகுதியில் தொங்குமேடையைத் தாங்கிப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டமைப்பு சரிந்துவிட்டதால் தொங்குமேடை பக்கவாட்டாகச் சாய்ந்தது என்று வெஸ்ட் கோஸ்ட் நகர மன்றப் பேச்சாளர் தெரிவித்தார்.

## மூத்த அதிகாரிப் பொறுப்புகளைப் புதிதாக ஏற்கும் மூவர்

தேசிய பூங்காக் கழகம், தேசிய வளர்ச்சி அமைச்சு, நகர மறுசீரமைப்பு ஆணையம் ஆகியவை தத்தம் மூத்த அதிகாரிப் பொறுப்புகளில் ஜூன் 1ஆம் தேதி முதல் மாற்றம் ஏற்பட உள்ளதாக நேற்று கூட்டாக அறிவித்தன.

தேசிய பூங்காக் கழகத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக திருவாட்டி ஹுவாங் யு–நிங் நியமிக்கப்பட்டுள்ளார். அங்கு தற்போது தலைமை நிர்வாகியாக உள்ள திரு கென்னத் எர், தேசிய வளர்ச்சி அமைச்சின் துணைச் செயலாளர் (திட்டமிடுதல்) பணியில் அமர்த்தப்படுவார்.

தேசிய வளர்ச்சி அமைச்சில் தலைமை உள்கட்டமைப்புத் திட்டமிடல் அதிகாரியான திருவாட்டி எடெல் டான் ஷியாவ் லிங், நகர மறுசீரமைப்பு ஆணையத்தில் துணைத் தலைமை நிர்வாகியாகவும் தலைமைத் திட்டமிடல் அதிகாரியாகவும் பொறுப்பேற்பார்.

## தாதிமை இல்ல சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கு நன்றி நவின்ற நிகழ்வு

ஆ. விஷ்ணு வர்தினி

சிங்கப்பூரின் சுகாதாரச் சூழல் மீண்டெழும் நிலையில் மருத்துவப் பராமரிப்பு ஊழியர்களின் உரிமைகள், நலன் ஆகியவற்றைக் காக்கும் முயற்சிகள் தொடர்ந்து அமலாக்கம் கண்டு வருகின்றன.

ஆனால், அதிக வேலைப் பளு, வேலைக் களைப்பு, சீரில்லாத வேலை–வாழ்க்கை சமநிலை ஆகியவை தொடர்ந்து ஊழியர்களை உறுத்தும் சிக்கல்கள் என சன்லவ் பராமரிப்பு இல்லத்தின் தலைமைத் திட்ட அதிகாரி திரு ராஜ மோகன் கூறினார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற அதிபர் ஹலிமா யாக்கோப்பின் தேநீர் உபசரிப்பு நிகழ்வில் திரு ராஜ மோகன் உட்பட கொவிட்–19 சூழலில் முன்னிலையில் இருந்து பணிபுரிந்த தாதிமை இல்லச் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் 50 பேர் கலந்துகொண்டனர். #செர்விங்எஸ்ஜி முயற்சியின் ஐந்தாவது அங்கமான இந்நிகழ்வு, அதிபர் மாளிகையில் நடந்தேறியது.

சுற்றுச்சூழல் சேவை ஊழியர்கள், பொதுச்சேவை விநியோக ஊழியர்கள், கொவிட்–19 செயல்பாடுகளைக் கையாண்ட அதிகாரிகள், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஆகியோரை #செர்விங்எஸ்ஜி திட்டத்தை முன்னிட்டு முன்னர் அதிபர் வரவேற்றிருந்தார்.



நேற்றைய தேநீர் உபசரிப்பு நிகழ்வில் தாதிமை இல்லங்களைச் சேர்ந்த சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களை அதிபர் ஹலிமா யாக்கோப் சந்தித்துப் பேசினார். **படம்: தொடர்பு, தகவல் அமைச்சு**

நாட்டு நலனில் முக்கியப் பங்காற்றும் அவர்களின் உழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இச்சந்திப்புகள் இடம்பெற்றன.

அண்மையில் மருத்துவப் பராமரிப்பு ஊழியர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்கும் முயற்சிகள் ஆலோசிக்கப்பட்டன. முறைகேடாக நடந்துகொள்ளும் அவசரகால உதவி தேவைப்படாத நோயாளிகள் மருத்துவமனையிலிருந்து நீக்கப்படும் காலம் விரைவில் வரலாம்.

இவ்வகையில் தொடர்ந்து அரசாங்கமும் ஆதரவு அமைப்புகளும் மருத்துவப் பராமரிப்பு ஊழியர்களின் தேவைகள் அறிந்து செயல்படுவது அவசியம் என்று திரு ராஜ மோகன் வலியுறுத்தினார். மனநல ஆதரவு அவர்களைத் தேடிவர வகைசெய்தல், வருத்தங்களை முன்வைக்க வழி அமைத்தல் ஆகியவை அதிகரிக்கும் என்பது அவரின் நம்பிக்கை.

"சமூகத்தினர் மருத்துவத் துறையின் பல்வேறு பணிகளுக்கு வெவ்வேறு அங்கீகாரத்தை வழங்குகின்றனர். ஆனால், அனைத்தும் அர்த்தம் மிகுந்தவை. அடுத்த தலைமுறையினரான இளையர்களை இத்துறைக்கு ஈர்ப்பது அவசியம். அதற்கு வேலை–வாழ்க்கை சமநிலை உள்ள சூழலும் தேவை," என்றார் திரு ராஜ மோகன், 62.

vishnuv@sph.com.sg